முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

# வியாபார முகாமைத்துவமாணி

## (திறந்த மற்றும் தொலைக்கல்வி கற்கைநெறி)

2026

# உரிமைத்துறப்பு

இந்த மாணவர் கையேடு ஐப்பசி, 2025 வரை பெறப்பட்ட தகவல்களை கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. 2023/2024 கல்வியாண்டு அல்லது அதன் பின்னர் வியாபார முகாமைத்துவமாணி (BBM) பட்டப் படிப்பை மேற்கொள்ளப் பதிவு செய்யும் அனைத்து மாணவர்களுக்கும் இந்த கையேடு பொருந்தும். இந்த கையேடு பொதுவான தகவலுக்காக மட்டுமே வழங்கப்படுகிறது என்பதை மாணவர்களுக்கு அறியப்படுத்து கின்றோம். எங்கள் மாணவர்கள் அவர்களுக்குப் பொருந்தக்கூடிய விதிகளை நன்கு அறிந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்கள் விதிகளை அறியாமல் இருப்பதனால் ஏற்படும் எந்த ஒரு விளைவுகளுக்கும் BBM அலகு பொறுப்பேற்காது. எனவே, இந்த கையேட்டின் நோக்கம் BBM மாணவர்கள் தங்கள் கற்கைக் காலத்தில் அவர்களுக்குப் பொருந்தக்கூடிய விதிகளைப் பற்றித் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பை வழங்குவதாகும். ஆதலால் மாணவர்கள் இந்த கையேட்டை கவனமாக வாசித்து எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். BBM கையேட்டை BBM இன் கற்றல் முகாமைத்துவ தளம் (LMS), திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் (CODL) வலைத்தளத்தில் பார்வையிடலாம்.

https://bbm.maco.jfn.ac.lk/
http://www.codl.jfn.ac.lk/



# பீடாதிபதியின் செய்தி

வியாபார முகாமைத்துவமாணி கற்கை நெறியின் புதுமுக மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் வெளியிடப்படும் மாணவர் கையேட்டுக்கு வாழ்த்துச் செய்தி வரைவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பொதுவாக, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்து, பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமை பெற்றிருந்தும், பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கும் தொழில் வாய்ப்பின் காரணமாக பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர முடியாதவர் களுக்கும் எமது பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் ஒரு வரப்பிரசாதமாக விளங்குகின்றது. குறிப்பாக, முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடமானது திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாகப் பல்வேறு கற்கைநெறிகளினை வழங்கி மாணவர்களின் வளமான எதிர்காலத்துக்கு வித்திடுகின்றது. அவற்றில் வியாபார முகாமைத்துவமாணி கற்கை நெறியும் ஒன்றாகும். நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளத்தக்கதாகவும், தகைமையுள்ள நற்பிரஜைகளை உருவாக்குவதற்கும் இக் கற்கைநெறி உதவுகின்றது. மேலும், வங்கியியலாளர்கள், நிதி, முகாமைத்துவத் துறைகளில் பணியாற்றுவோருக்கும் தத்தமது தொழில்சார் முன்னேற்றத்துக்கு வியாபார முகாமைத்துவமாணி கற்கை நெறி காத்திரமான பங்காற்றுகின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் பட்டக் கற்கைநெறிக்கான சகல தேவைப்பாடுகளையும் கொண்டமைந்த இக்கற்கைநெறி, எமது பீடத்தின் புலமைசார் பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர் களைக் கொண்டு சிறப்பாக வழங்கப்படுகின்றது. இக்கற்கைநெறியில் பயிலும் மாணவர்களின் வளமான எதிர்காலத்துக்கு மிகச் சிறந்த உத்தரவாதமுண்டு என்றால் அது மிகையல்ல. இக் கற்கைநெறியினை பூரணப்படுத்திய மாணவர்கள் பல்வேறு உயர்பதவிகளினை வகிப்பதனை இதற்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.

இக் கற்கைநெறியின் கட்டமைப்பு, பாடத்திட்டம், பரீட்சை நடைமுறைகள் மற்றும் விதிமுறைகள் உட்படப் பலவிடயங்களைத் தெளிவாக விளக்கும் வகையில் இக் கையேடு வெளிவருகின்றது. அர்ப்பணிப்புமிக்க முறையில் இந்தக் கையேட்டை உருவாக்கியுள்ள வியாபார முகாமைத்துவமாணி கற்கை நெறி அலகின் இணைப்பாளர் மற்றும் ஆளணியினரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, கற்கை நெறியில் உள்வாங்கப்படவுள்ள மாணவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பேராசிரியர் நவநீதகிருஷ்ணன் கெங்காதரன்,**
பீடாதிபதி,
முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம்.



# பணிப்பாளரின் செய்தி

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் ஊடாக வழங்கப்படும் பட்டக் கற்கைநெறியில் அதிக மாணவர்கள் விரும்பும் கற்கைநெறிகளில் ஒன்றாக வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறி காணப்படுகின்றது. இக் கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட உங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்திருந்த போதும் திறமை அடிப்படையிலான தேர்வில் நீங்கள் வெற்றி பெற்றுள்ளீர்கள். உங்களையும் எமது தொலைக்கல்வி மாணவ குழுமத்தில் அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்வதில் நான் பெரும் மகிழ்வடைகின்றேன். இருக்கின்ற தொழில் நிலையிலிருந்துவிரைவான வளர்ச்சியை பெறவும் புதிய தொழில்களை ஆரம்பிக்கவும் தேவையான அறிவினையும் ஆற்றல்களையும் மனப் பாங்கினையும் இந்த கற்கைநெறியானது விருத்தி செய்யும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. குடும்ப சுமை, சமூகப்பொறுப்பு மற்றும் வேலைப் பழுக்களின் மத்தியிலும் இக்கற்கைநெறியினை கற்பதற்காக முன்வந்துள்ள உங்களை பாராட்டுகின்றேன்.

இக் கற்கைநெறியானது கல்வித்துறையின் இலங்கை தர நியமங்களின் தேவைப்பாடுகளுக்கு அமையவும் வணிக முகாமைத்துவ துறையின் நடைமுறைகளுக்கு ஏற்றவாறும் சிறந்த அனுபவமும் ஆற்றலும் மிக்க விரிவுரையாளர் குழுவினால் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது. இக் கற்கைநெறியானது எமது தாய் மொழியான தமிழில் கற்பிக்கப்படுவதனால் தெளிவான விளக்கங்களையும் சிறப்பான புரிதல்களையும் மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தங்களது இந்த புதிய பயணம் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு நீங்கள் ஓர் சிறந்த ஆளுமையுள்ள சமூகப் பற்றுள்ள தலைவர்களாகத் திகழ்ந்து எதிர்கால சமூகத்திற்கு ஓர் சிறந்த வழிகாட்டியாக இருக்கவேண்டுமென எதிர் பார்த்து நிற்கின்றேன்.

**பேராசிரியர் ஜே.றொபின்சன்**
பணிப்பாளர்,
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.



# இணைப்பாளரின் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் அனுசரணையுடன் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறி பயில் மாணவர் கையேட்டிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன். வியாபார முகாமைத்துவமாணி கற்கை நெறியானது வியாபார உலகில் வெற்றிகரமாகச் செயற்படத் தேவையான அனைத்து அடிப்படை அம்சங்களையும் பயில வழிகோலுகின்றது. இது நிறுவனமொன்றின் கணக்கியல், நிதி, மனிதவளம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றைப் பற்றிய ஆழமான புரிதலை வழங்குகிறது.

வியாபார முகாமைத்துவம் எனும் பதம் தொழிற்புரட்சியின் போது தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்கள் பேரளவில் எழுச்சியடைந்த காலத்தில் தோன்றியது எனலாம். இந்த அசுர வளர்ச்சியுடன் நிறுவனங்களைத் திறமையாக நிர்வகிக்க, முன்னகர்த்திச்செல்ல புதிய வழிகள் தேவைப்பட்டன. இதன் விளைவாக இன்று இத்துறையானது தனித்துவமான துறையாக மிளிர்கின்றது. க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் பல்கலைக்கழக அடிப்படைத் தகுதி எய்துகின்ற அனைத்து மாணவர்களுக்கும் எமது பீடத்தினால் நடத்தப்படுகின்ற பரீட்சையில் தேறுகின்ற குறிப்பிட்டளவு மாணவர்கள் வருடந்தோறும் இக்கற்கை நெறியைப் பயில உள்வாங்கப்படுகிறார்கள். இவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றவர்களுக்கு எமது பீடத்தலுள்ள அனுபவமும் ஆற்றலும் நிறைந்த பேராசான்களால் கல்விப் போதனைகளும் வழிகாட்டல்களும் வர்த்தக மாற்றங்களுக்கேற்ப வழங்கப்படுகின்றன. வெறுமனே ஏட்டுக்கல்வியன்றி அனுபவக்கல்வியும் பெறுகின்ற வகையில் மாணவர்கள் தமது வேலைத்தளங்களில் பயிற்சி பெறவும் சவால்களை எதிர்கொள்ளவும் வாய்ப்புக்கள் அளிக்கப்படுகின்றன. அத்துடன் தாய்மொழியில் கற்கைநெறி பயிலவும் வாய்ப்புள்ளமை அவர்களுக்கு வரப்பிரசாதமாகவும் தமது தேடலை, சிந்தனைக் கிளறலை விருத்தி செய்யவும் துணைபுரிகிறது எனலாம்.

இக்கையேடானது கற்கை நெறிபற்றிய தகவல்களையும் பரீட்சை பற்றிய விதிகளையும் சிறப்பாக வழங்குகின்றது. இக்கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டு பதின்நான்கு அணிகள் திறம்பட தமது கற்கையைப் பூர்த்திசெய்து இருக்கின்றார்கள் என்பது எமது பீடத்தின் பெருமைக்கு சான்றாகத் திகழ்கின்றது. தாங்கள் 15 ஆவது அணியினராக காலடி எடுத்து வைத்திருப்பது கண்டு தங்களை வரவேற்பதில் அகமகிழ்கின்றேன். இன்று உங்கள் கல்விப் பயணத்தில் நீங்கள் இன்னொரு மைல்கல்லை எட்டியிருப்பது பெரும்பேறாகவே கருதுகின்றேன். வியாபார உலகில் நொடிக்கு நொடி மாறிக்கொண்டே இருக்கும் இந்த மாற்றங்களைத் தழுவிக் கொள்ளும் திறனை வளர்த்து புலமையும் ஆற்றலும் மலிந்து சிறப்புடன் பிரகாசிக்க பார்வதி பரமேஸ்வரன் துணைகொண்டு மனமார வாழ்த்துகின்றேன்.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**திரு.ச.பாலபுத்திரன்**
இணைப்பாளர்,
வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறி.

# உள்ளடக்கம் பக்கம்

| | | |
|---|---|---|
| 1. | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கான அறிமுகம் | 01 |
| 2. | முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்திற்கான அறிமுகம் | 02 |
| 3. | வியாபார முகாமைத்துவமாணி அலுவலகத்திற்கான அறிமுகம் | 03 |
| 4. | திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்துக்கான அறிமுகம் | 04 |
| 5. | வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறி பற்றிய விபரம் | 05 |
| 6. | பதிவு செய்தல் | 09 |
| 7. | கற்கைநெறியின் உள்ளடக்கம் | 11 |
| 8. | பாட அலகுகளின் உள்ளடக்கம் | 13 |
| 9. | பரீட்சைகள் | 27 |
| 10. | பட்டம் வழங்குதல் | 33 |
| 11. | மாணவர் மேன்முறையீடு | 36 |
| 12. | பதிவைப் புதுப்பித்தல் | 38 |
| 13. | நூலகம் | 38 |

# 1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஓர் அறிமுகம்

ஐம்பது வருடங்கள் பெருமை மிக்க வரலாற்றைக் கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (UOJ) தரமான கற்றல், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிகளை வழங்குவதில் தனக்கான இடத்தை தக்க வைத்துக் கொள்வதற்கான சவால்களை வெற்றிகரமாக எதிர் கொண்டு வருகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது யாழ்ப்பாண நகரத்தின் மையத்தில் ஒரு இலாப நோக்கற்ற பொது உயர் கல்வி நிறுவனமாக 1974 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பொறியியல், மருத்துவம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், முகாமைத்துவ கல்வி மற்றும் வணிகம், கலை, உயர்பட்டப் படிப்புகள், விவசாயம், இந்து சமயக் கல்வி, சித்த மருத்துவம், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் மற்றும் இராமநாதன் நுண்கலை ஆகிய பீடங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் பீடங்கள் திருநெல்வேலி, மருதனார்மடம், கைதடி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. உள்ளக விளையாட்டு அரங்கம் உட்பட பல விளையாட்டு வசதிகளைக் கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விளையாட்டுத்துறைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கின்றது. தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 14000 இற்கு மேற்பட்ட மாணவர்களும் 2000 இற்கு மேற்பட்ட பணியாளர்களும் காணப்படுகின்றனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மாணவர்களும் இணைந்து கல்வி கற்று வருகின்றார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எப்போதும் உள்வாரி மற்றும் வெளிவாரி மாணவர்களின் திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

## தூரநோக்கு

கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் புலமைத்துவத்தில் சிறந்து விளங்கும் ஒரு முன்னணி மையமாகத் திகழ்தல்.

### இலட்சிய நோக்கு

தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் தரமான கற்றல், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலம் வட இலங்கையின் சமூக பொருளாதார மற்றும் பண்பாட்டுத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதுடன் அறிவார்ந்த, தொழில்ரீதியில் திறமைமிக்க பட்டதாரிகளை உருவாக்குவதில் சிறந்த கல்வி மையமாக இருத்தல்.

# உ. முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்திற்கான அறிமுகம்

முகாமைத்துவ மற்றும் வணிக கல்வியானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1977 ஆம் ஆண்டு கலைப்பீடத்தின் பொருளியல் துறையின் கீழ் வணிகமாணி இளங்கலைப் பட்டப்படிப்புடன் ஆரம்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, 1983 ஆம் ஆண்டு வணிகத்துறை நிறுவப்பட்டு, 1986 ஆம் ஆண்டில், இத்துறையின் நோக்கம் விரிவுபடுத்தப்பட்டு வணிக மற்றும் முகாமைத்துவ கற்கைகள் துறை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1994 ஆம் ஆண்டில், வணிக மற்றும் முகாமைத்துவ கற்கைகள் துறையானது முகாமைத்துவ கற்கைகள் துறை மற்றும் வணிகத்துறை என இரு துறைகளாக பிரிக்கப்பட்டது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் (FMSC) 29 வைகாசி 1999 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது பீடமாக கலைப்பீடத்தின் கீழ் காணப்பட்ட வணிகத்துறை மற்றும் முகாமைத்துவ கற்கைகள் துறை என்பவற்றை தன்னகத்தே கொண்டு பிரதான வளாகத்தில் நிறுவப்பட்டது.

2009 இல் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் மறுசீரமைக்கப்பட்டு புதிய நான்கு துறைகள் நிறுவப்பட்டன. அவையாவன கணக்கியல், நிதி முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகும்.

தற்போது முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடமானது 2000 ற்கும் மேற்பட்ட உள்வாரி மாணவர்களையும் 1000 ற்கும் மேற்பட்ட வெளிவாரி மாணவர்களையும் தன்னகத்தே கொண்டு பெரும் பீடமாக இயங்கி வருகின்றது.

**தூரநோக்கு**

முகாமைத்துவம் மற்றும் வணிகத்தில் கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் புலமைத்துவம் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் ஒரு முன்னணி மையமாக திகழ்தல்.

**இலட்சிய நோக்கு**

சவாலான வணிக சூழலை வெற்றி கொள்வதற்கும் முயற்சியா ளராக, முதலீட்டாளராக, முகாமையாளராக மற்றும் தந்திரோபாய திட்டமிடலாளராக இந்த உலகத்தில் உண்மையான வேறுபாட்டை உருவாக்குவதற்கும் மாணவர்களின் கல்வித் திறன், படைப்பாற்றல், வேலைவாய்ப்பு, உலகளாவிய நுண்ணறிவு மற்றும் நெறிமுறை விழிப்புணர்வு ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதனூடாக மாணவர்க ளின் வாழ்க்கையை மாற்றுவது.

# 3. வியாபார முகாமைத்துவமாணி அலுவலகத்திற்கான அறிமுகம்

வியாபார முகாமைத்துவமாணி (BBM) கற்கைநெறியின் கல்விச் செயற்பாடுகளானது BBM அலகினால் நடாத்தப்பட்டு வருகின்றது. இந்த கற்கை நெறியானது ஒருங்கிணைப்பாளர், போதனாசிரியர்கள் (Tutor Mentors) மற்றும் Moodle நிர்வாகி உட்பட ஆறு பணியாளர்களைக் கொண்டுள்ளது. BBM கற்கைநெறியின் இணைப்பாளர் BBM கற்கை நெறியின் முழுசெயற்பாடுகளையும் ஒருங்கிணைத்து வழி நடாத்துகின்றார். போதனாசிரியர்கள் மாணவர்களின் கல்வி சார்ந்த விடயங்களை கையாளுகின்றனர். BBM கற்கைநெறியின் கற்றல் முகாமைத்துவ முறைமையானது (LMS) Moodle நிர்வாகியால் முகாமை செய்யப்படுகின்றது.

# 4. திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்துக்கான அறிமுகம்

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் (CODL) மாணவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன் 1991 இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த மையம் பதிவு மற்றும் பரீட்சைகள், கற்றல் மற்றும் வளங்கள், பயிற்சி மற்றும் அபிவிருத்தி போன்ற மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. CODL குறிப்பிட்ட பட்டம் வழங்கும் பீடங்களுடன் நெருக்கமாக இணைந்து செயற்பட்டு வருகின்றது. குறிப்பிட்ட பீடங்களால் நியமிக்கப்பட்ட கல்வியாளர்களைக் கொண்ட சபையின் மூலம் கல்வித் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு, திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய மானது பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் (தலைவர்), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) ஆல் பரிந்துரைக்கப்பட்ட ஒருவர், UGC பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்களில் இருந்து மூதவையால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள், பட்டம் வழங்கும் பீடங்களின் பீடாதிபதிகள், BOS உறுப்பினர்கள், பதிவாளர், நிதியாளர், EDECU இன் தலைவர், SAR/ EDECU மற்றும் SAB/ EDECU ஆகியோரை உள்ளடக்கிய உயர் மட்டச் சபையினால் நிர்வகிக்கப்படுகின்றது.

தற்போது, CODL கலைமாணி பட்டப்படிப்பு, வணிகமாணி பட்டப்படிப்பு மற்றும் வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு ஆகியவற்றை வழங்கி வருகின்றது. அத்துடன் CODL பல குறுங்கால கற்கைநெறிகளையும் வழங்கி வருகின்றது.

# 5. வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறி பற்றிய விபரம்

## அறிமுகம்

வியாபார முகாமைத்துவமாணி (BBM) பட்டப்படிப்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்துடன் இணைந்து திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால் வழங்கப்படுகிறது. சமகால வணிக உலகில் ஆக்க பூர்வமாகவும் புதுமையாகவும் இருக்கத் தேவையான அடிப்படை முகாமைத்துவ மற்றும் வணிக அறிவை உருவாக்கும் நோக்கத்தோடு இக்கற்கை நெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இக் கற்கைநெறி மாணவர்களுக்கு தொழில்தருநர் எதிர்பார்க்கும் உயர்மட்ட நிபுணத்துவத்தை வழங்குவதற்கான ஒரு தளத்தை உருவாக்குவதுடன் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிதல் மற்றும் நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குதல் என்பவற்றுக்கான அறிவையும் திறன்களையும் வழங்குகின்றது. இக்கற்கைநெறியானது முகாமையாளர்களாகவும் தலைவர்களாகவும் வரவேண்டும் என்ற அபிலாஷைகளைக் கொண்ட மாணவர்களையும் வணிக மற்றும் நிர்வாக துறையில் ஒரு தொழிலைக் கண்டறிவதில் தீவிர ஆர்வம் கொண்ட மாணவர்களையும் இலக்காகக் கொண்டுள்ளது.

மாணவர்களின் கற்றலுக்கு தேவையான வளங்கள் தமிழ் மொழியில் கற்றல் முகாமைத்துவ முறைமையில் (LMS) பதிவேற்றம் செய்து வழங்கப்படுகின்றது.

பட்டப்படிப்பின் காலம் மூன்று ஆண்டுகள் ஆகும். இருப்பினும் மூன்று ஆண்டுகளில் BBM பட்டத்தினை பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாத மாணவர்கள் குறித்த சில தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருந்தால் அவர்கள் வியாபார முகாமைத்துவமாணியில் உயர் டிப்ளோமா அல்லது வியாபார முகாமைத் துவமாணியில் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## கற்கைநெறியின் நோக்கங்கள்

வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பானது இன்றைய வணிக அமைப்புகளால் எதிர்பார்க்கப்படும் பல்வேறு வணிக மற்றும் முகாமைத்துவ அறிவை வழங்குகிறது. இக் கற்கைநெறியானது மாணவர்களுக்கு நிதி, கணக்கியல், சந்தைப்படுத்தல் மற்றும் மனித வளத் துறை சார்ந்த அறிவையும் திறன்களையும் வழங்குகின்றது.

## இக் கற்கைநெறியின் முக்கிய நோக்கங்கள்

* வணிக மற்றும் முகாமைத்துவ செயல்முறை பற்றிய அறிவை வழங்குதல் மற்றும் நடைமுறை பயன்பாடுகளுடன் அவற்றை ஒருங்கிணைத்தல்.
* நிறுவனரீதியான பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்து, விமர்சனரீதியாக மதிப்பீடு செய்து, அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திறன்களை வளர்த்தல்.
* வணிக நிறுவனங்களின் மாறிவரும் தேவைகளுக்கு முற்கூட்டிய பிரதிபலிப்பை வழங்கக்கூடிய பட்டதாரிகளை உருவாக்கல்.
* வணிக முகாமைத்துவ துறையில் சிறந்த தொழில் வாய்ப்பை பெற்று கொள்வதற்கு தொடர்பாடல், பிரச்சினைகளைத் தீர்த்தல், நுண்ணறிவு விவேகம், தலைமைத்துவம், இடர் மதிப்பீடு மற்றும் தர்க்கித்தல் திறன்களையும், அறிவார்ந்த திறன்களையும் மற்றும் தொழில்சார் திறன்களையும் அபிவிருத்தி செய்தல்.

## கற்கைநெறியின் விளைவுகள்

வியாபார முகாமைத்துவமாணி பட்டதாரி ஒருவர் பின்வரும் திறன்களை கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

* நிறுவனங்களில் வணிக முகாமைத்துவ துறை சார்ந்த கோட்பாட்டு ரீதியான அறிவினைப் பயன்படுத்தும் திறன்.
* வணிக முகாமைத்துவத் துறையில் வேலைவாய்ப்பு அல்லது பதவி உயர்வு பெறுவதற்கான திறன்கள் மற்றும் பண்புகளை வெளிகாட்டும் திறன்.

* வணிக முகாமைத்துவ பிரச்சினைகளை அடையாளம் கண்டு பகுப்பாய்வு செய்து அவற்றை தீர்க்கும் திறன்.
* தங்களுக்கான வலுவான தொழில் மற்றும் வாழ்க்கை இலக்குகளை நிறுவும் திறன்.
* சிறந்த தகவல் தொடர்புகளை பேணும் திறன்.
* தன்னிச்சையாக வேலை செய்யும் திறன் மற்றும் வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் உலகில் தங்கள் தொழிலை நிர்வகிக்கும் திறன்.
* ஒரு குழுவில் உறுப்பினராகவும் தலைவராகவும் சிறப்பாக செயற்படும் திறன்.
* வேலைத்தளத்திலும் சமூகத்திலும் நெறிமுறை நியமங்கள் மற்றும் விதிமுறைகளை பேணும் திறன்.
* தனிநபர்கள் மற்றும் குழுக்களுடன் வலுவான உறவை உருவாக்கும் திறன்.
* வாழ்நாள் முழுவதும் சுயமாக கற்றுக் கொள்ளும் திறன்.
* பணம், நேரம், தகவல் மற்றும் மனித வளங்களைச் சிறப்பாக பயன்படுத்தும் திறன்.
* மாறிக்கொண்டிருக்கும் சூழலில் சிறப்பான முடிவை எடுக்கும் திறன்.

## பட்டதாரியின் தகைமை சார் பண்புகள் மற்றும் ஆற்றல்கள் (Graduate Profile)

வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறியானது மாணவர்களை செயற்திறன் மிக்க பட்டதாரிகளை உருவாக்குவதற்கு தேவையான திறன்களையும் பண்புகளையும் வழங்குவதனை நோக்கமாக கொண்டுள்ளது. இது தனியார், அரச மற்றும் இலாப நோக்கமற்ற நிறுவனங்களில் வணிக முகாமைத்துவ அறிவின் நடைமுறைப் பயன்பாடு தொடர்பாகவும் தீர்மானம் எடுத்தல் தொடர்பாகவும் அதிகமாக கவனமெடுக்கின்றது. இக்கற்கைநெறி

கணக்கியல், வர்த்தகம், நிதி, மனித வள முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற துறைகளில் பரந்த அளவிலான தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவுடன், பட்டதாரிகள் பின்வரும் பண்புகளைக் கொண்டிருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**BBM**
பட்டதாரிகளின் பண்புகள்

**மனப்பாங்கு மற்றும் திறன்கள்**

புத்துருவாக்க சிந்தனை பிரச்சினைகளைத் தீர்த்தல், தொடர்பாடல், தலைமைத்துவம், குழு ஒத்துழைப்பு, முயற்சியாண்மைத் திறன்கள், தகவல் பயன்பாடு மற்றும் சமூகத்திறன்கள் போன்ற குறிப்பிட்ட மனப்பாங்குகள் மற்றும் திறன்களைப் பிரயோகிப்பதற்கான ஆற்றல்.

**சுய ஊக்கப்படுத்தல் வாழ்நாள் கற்றல்**

வெற்றிகரமான தொழிலுக்கு வழிவகுப்பதும் சமூகத்தின் நேர்மறையான மறுமலர்ச்சிக்கு பயனுள்ளதுமான சுய ஆரம்பித்தலுக்கும் எதிர்காலம் நோக்கிய கற்றலுக்கான இயல்பான ஊக்கப்பாட்டை கொண்டிருத்தல்.

**நெறிமுறைகளும் தொழில் நிபுணத்துவமும்**

நெறிமுறை நடத்தை மற்றும் நடைமுறையில் அதன் பயன்பாட்டின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்.
நிபுணத்துவ பண்புகளையும் திறன்களையும் வெளிகாட்டும் திறன்.

**விழுமியங்கள்**

நிலையானதான விழுமியங்களை உருவாக்கும் பொருட்டு எதிர்காலத்தை நோக்கியதும் சமூக மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பாக பொறுப்புணர்ச்சியுள்ள வணிக முகாமைத்துவக் கொள்கைகளை அங்கீகரித்தலும் பயன்படுத்தலும்.

**ஞானம்**

வணிக முகாமைத்துவ செயற்பாட்டில் உள்ள எண்ணக்கருக்களை ஆராய்ந்து அவற்றை நடைமுறைப் பயன்பாடுகளுடன் ஒருங்கிணைத்தல்.

## 6. பதிவு செய்தல்

### அனுமதிக்கான தகைமைகள்

ஒரு விண்ணப்பதாரர் வியாபார முகாமைத்துவமாணி பட்டப் படிப்பில் அனுமதி பெற பின்வரும் தகைமையை கொண்டிருக்க வேண்டும்:

* G.C.E A/L தேர்வில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களிலும் சித்தி அடைந்திருப்பதுடன் பொதுஅறிவுப் பரீட்சையில் ஆகக் குறைந்தது 30% மான புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும்.

### விண்ணப்பிக்கும் செயல்முறை

திறந்த மற்றும் தொலைதூர பட்டப்படிப்பான வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறியில் இணைவதற்கான விண்ணப் பங்களை அழைப்பதற்காக உள்ளூர்/தேசிய செய்தித் தாள்கள், சமூக ஊடகங்கள் மற்றும் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய இணையத் தளம் என்பவற்றில் வெளியிடப்படும். விண்ணப்பப் படிவங்களுக்கான இணைப்பினை (Link) திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் வலைத்தளத்திலிருந்து பெறுவதுடன் விண்ணப்பங்களை இணைய வழி மூலமாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

### தெரிவு செய்தல் செயல்முறை

அனுமதிக்கான தகைமைகளை கொண்டிருக்கும் விண்ணப்பதாரர் கள் உளச்சார்பு பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். உளச்சார்பு பரீட்சை யில் சிறந்த மதிப்பெண்களை பெற்று கொண்டவர்கள் நேர்முகத் தேர் வுக்கு அழைக்கப்படுவார்கள். இறுதியாக, விண்ணப்பதாரர்கள் உளச் சார்பு பரீட்சையில் பெற்றுக்கொண்ட மதிப்பெண்கள் மற்றும் நேர்முகத் தேர்வில் பெற்றுக் கொண்ட மதிப்பெண்களின் அடிப்படையில் வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

## மாணவர் பதிவுப் புத்தகம்

மாணவர்கள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் பதிவு செய்யும் போது மாணவர் பதிவுப் புத்தகம் வழங்கப்படும். மாணவர்கள் வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறியை நிறைவு செய்யும் வரை மாணவர் பதிவுப் புத்தகம் அவர்களுக்கான சொத்தாகக் கருதப்படும். கற்கைநெறியை பூர்த்தி செய்த பின்னர் மாணவர்கள் அவர்களது பதிவுப் புத்தகத்தை யாழ்ப்பாண பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திற்கு மீண்டும் சமர்ப்பித்தல் வேண்டும். மாணவர் ஒருவர் தனது பதிவுப் புத்தகத்தைத் தொலைத்துவிட்டால், பணம் செலுத்தி திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் மாதிரிப் பதிவுப் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். செல்லுபடியாகும் மாணவர் பதிவுப் புத்தகம் இல்லாமல் மாணவர்கள் பரீட்சைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

# 7. கற்கைநெறியின் உள்ளடக்கம்

## அறிமுகம்

இந்த கற்கைநெறியானது 98 கட்டாய கிரெடிட் பெறுமானங்களை கொண்டுள்ளது. அதில் 8 கிரெடிட் பெறுமானங்கள் ஒரு பாடநெறிக்கு 2.00 கிரெடிட் பெறுமானமாக முதலாம் மற்றும் இரண்டாம் வருடங்களின் நான்கு வணிக ஆங்கில பாடநெறிகளுக்கும் ஏனைய முப்பது பாட நெறிகளுக்கு 3.00 கிரெடிட் பெறுமானமாக 90 கிரெடிட் பெறுமானங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு கிரெடிட் பெறுமானம் 50 அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்களுக்கு சமனாகும்.

| | |
|---|---|
| கற்கைநெறிக்கான காலப்பகுதி | 3 ஆண்டுகள் |
| கற்கைநெறிக்கான அரையாண்டுகளின் எண்ணிக்கை | 6 அரையாண்டுகள் |
| அரையாண்டிற்கான காலப்பகுதி | 20 வாரங்கள் (பரீட்சைகள் உள்ளடங்கலாக) |
| கற்றல் முறை | கலந்த கற்பித்தல் முறைமை |
| பயிற்றும்மொழி | தமிழ் |
| கற்கைநெறியை முடிப்பதற்கான ஆகக்கூடிய காலப்பகுதி | 6 ஆண்டுகள் |

### கற்கைநெறி அலகுகளின் விபரங்கள்

| முதலாம் வருடம் | | |
|---|---|---|
| **பாடக் குறியீடு** | **பாடத் தலைப்பு** | **கிரெடிட்** |
| | **முதலாம் அரையாண்டு** | |
| **BBM 1113** | முகாமைத்துவத் தத்துவங்கள் | 3 |
| **BBM 1123** | வணிகச் சூழல் | 3 |
| **BBM 1133** | அறிமுகக் கணக்கீடு | 3 |
| **BBM 1143** | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் அறிமுகம் | 3 |
| **BBM 1153** | கூட்டாண்மை நிதிக்கோர் அறிமுகம் | 3 |
| **BBM 1162** | வணிக ஆங்கிலம் I | 2 |
| | **இரண்டாம் அரையாண்டு** | |
| **BBM 1213** | நிறுவன நடத்தை | 3 |
| **BBM 1223** | கிரய மற்றும் முகாமைக் கணக்கீடு | 3 |
| **BBM 1233** | சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் | 3 |
| **BBM 1243** | வணிகத்திற்கான கணிதமும் புள்ளிவிபரவியலும் | 3 |
| **BBM 1253** | வணிகப் பொருளியல் | 3 |
| **BBM 1262** | வணிக ஆங்கிலம் II | 2 |
| மொத்த கிரெடிட் பெறுமானங்கள் | | 34 |

| இரண்டாம் வருடம் | | |
|---|---|---|
| பாடக் குறியீடு | பாடத் தலைப்பு | கிரெடிட் |
| முதலாம் அரையாண்டு | | |
| **BBM 2113** | வணிகச் சட்டம் | 3 |
| **BBM 2123** | வணிகத்திற்கான கணிய அளவீட்டு முறை | 3 |
| **BBM 2133** | மனிதவள முகாமைத்துவம் | 3 |
| **BBM 2143** | உயர் முகாமைக் கணக்கீடு | 3 |
| **BBM 2153** | வங்கி முகாமைத்துவம் | 3 |
| **BBM 2162** | வணிக ஆங்கிலம் III | 2 |
| இரண்டாம் அரையாண்டு | | |
| **BBM 2213** | சர்வதேச வர்த்தகம் | 3 |
| **BBM 2223** | கருத்திட்ட முகாமைத்துவம் | 3 |
| **BBM 2233** | சிறு வணிக முகாமைத்துவம் | 3 |
| **BBM 2243** | நிதிக் கணக்கீடு | 3 |
| **BBM 2253** | வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவம் | 3 |
| **BBM 2262** | வணிக ஆங்கிலம் IV | 2 |
| மொத்த கிரெடிட் பெறுமானங்கள் | | 34 |

| மூன்றாம் வருடம் | | |
|---|---|---|
| பாடக் குறியீடு | பாடத் தலைப்பு | கிரெடிட் |
| முதலாம் அரையாண்டு | | |
| **BBM 3113** | நிதி அறிக்கையிடல் | 3 |
| **BBM 3123** | நிதித் தந்திரோபாயம் | 3 |
| **BBM 3133** | நுகர்வோர் நடத்தை | 3 |
| **BBM 3143** | தகவல் முகாமைத்துவம் | 3 |
| **BBM 3153** | தொழில் சட்டங்களும் தொழிலாளர் உறவும் | 3 |
| இரண்டாம் அரையாண்டு | | |
| **BBM 3213** | தந்திரோபாய முகாமைத்துவம் | 3 |
| **BBM 3223** | தலைமைத்துவமும் குழு முகாமைத்துவமும் | 3 |
| **BBM 3233** | செயற்பாட்டு முகாமைத்துவம் | 3 |
| **BBM 3243** | பொது நிதியியல் | 3 |
| **BBM 3253** | கணக்காய்வும் வரியியலும் | 3 |
| மொத்த கிரெடிட் பெறுமானங்கள் | | 30 |

# 8. பாட அலகுகளின் உள்ளடக்கம்

## முதலாம் வருடம் - முதலாம் அரையாண்டு

**BBM 1113: முகாமைத்துவத் தத்துவங்கள்**

இந்தப் பாட அலகானது மாணவர்களுக்கு தேவையான முகாமைத் துவத்துறை சார்ந்த அடிப்படை எண்ணக்கருக்கள், கொள்கைகள், செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய அறிவை வழங்கு வதனை நோக்கமாக கொண்டுள்ளது.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது முகாமைத்துவத்திற்கான அறிமுகம், முகாமைத்துவச் சிந்தனைகளின் பரிணாம வளர்ச்சி, முகாமைக் கோட்பாடுகளின் பயன்பாடுகள், முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகள், தீர்மானம் எடுத்தல், ஊழியர்களை ஊக்குவித்தல் மற்றும் நிறுவனங்க ளில் தொடர்பாடல் போன்ற முகாமைத்துவத்தின் அடிப்படை அம்சங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 1123: வணிகச் சூழல்**

இந்தப் பாட அலகின் நோக்கமானது ஒரு நிறுவனம் இயங்கிக் கொண்டிருக்கும் வணிகச் சூழல் பற்றிய விளக்கத்தையும் வணிக நிறுவனங்கள் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றிய ஒரு பார்வையையும் வழங்குவது ஆகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது வணிகச் சூழலுக்கான அறிமுகம், இலங்கையில் அரசு மற்றும் வணிக உறவு, சிற்றினச் சூழல் மற்றும் பேரினச் சூழல் போன்ற வணிகச் சூழல் தொடர்பான பிரதான விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

**BBM 1133: அறிமுகக் கணக்கீடு**

இந்தப் பாட அலகானது கணக்கீடு மற்றும் நிறுவன முடிவெடுத்தல் மற்றும் பொறுப்புக்கூறலில் கணக்கீட்டு தகவலின் பங்கு என்பவற்றுக் கான அறிமுகத்தை வழங்குவதனை நோக்கமாக கொண்டுள்ளது.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது கணக்கீட்டின் தன்மை, இரட்டைப்பதிவு முறைமை, தனியுரிமைக்கான முடிவுக்கணக்கு மற்றும் பங்குடைமைக் கான முடிவுக்கணக்கு போன்ற கணக்கீட்டின் அடிப்படை விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

## BBM 1143: தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் அறிமுகம்

இந்தப் பாட அலகின் நோக்கமானது வணிக செயல்முறைகளுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவை வழங்குவதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருவிகள், மென்பொருள்களுக்கான அறிமுகம், கணினி முறைமை, கணினி வலையமைப்பு மற்றும் தரவு தொடர்பாடல், இணையத்தளம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை வணிகத்திற்காக பிரயோகித்தல் போன்ற தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பிரதான விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்து கின்றது.

## BBM 1153: கூட்டாண்மை நிதிக்கோர் அறிமுகம்

நிறுவன நிதி பற்றிய அடிப்படை அறிவையும் வணிக சூழலில் அதன் பயன்பாடுகள் தொடர்பான அறிவையும் வழங்குவதே இந்தப் பாட அலகின் நோக்கமாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள்: 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது நிறுவன நிதிக்கான அறிமுகம், நிதி அறிக்கைகள் மற்றும் செயற்திறன் பகுப்பாய்வு, பணத்தின் கால மதிப்பு, இடர் மற்றும் வருவாய், பிணைகள் மற்றும் பங்குகளின் மதிப்பீடு, முதலீட்டு தீர்மானங்கள் மற்றும் மூலதனக் கட்டமைப்பு போன்ற நிறுவன நிதி சார்ந்த முக்கிய அம்சங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 1162: வணிக ஆங்கிலம் I**

இந்தப் பாட அலகின் நோக்கமானது மாணவர்களின் வாசிப்பு, எழுதுதல், பேசுதல் மற்றும் கிரகித்தல் போன்ற மொழித் திறன்களை மேம்படுத்துவதற்கும் மற்றும் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பவர்களின் சொற்களஞ்சியத்தை வளப்படுத்துவதற்குமான வாய்ப்புகளை வழங்குவதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 100 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது வணிக ஆங்கிலம் தொடர்பான வாசித்தல், எழுதுதல், இலக்கணம், பேசுதல் மற்றும் கிரகித்தல் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

## முதலாம் வருடம் - இரண்டாம் அரையாண்டு

**BBM 1213: நிறுவன நடத்தை**

இந்தப் பாட அலகின் நோக்கமானது நிறுவன நடத்தை சார்ந்த கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்கள் மற்றும் வேலைத்தளத்தில் இவற்றின் பிரயோகங்கள் தொடர்பான அறிவை மாணவர்களுக்கு வழங்குவதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள்: 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது நிறுவன நடத்தைக்கான அறிமுகம், மனப்பாங்கு, ஆளுமை, புலக்காட்சி, நிறுவன அரசியல், கற்றல், மன அழுத்த முகாமைத்துவம் மற்றும் முரண்பாட்டு முகாமைத்துவம் போன்ற நிறுவன நடத்தையின் அடிப்படை அம்சங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 1223: கிரய மற்றும் முகாமைக் கணக்கீடு**

இந்தப் பாட அலகின் நோக்கமானது மாணவர்களுக்கு கிரயக் கணக்கியலின் அடிப்படை அறிவை வழங்குவதுடன் நிர்வாகத் தீர்மானங்கள் எடுப்பதற்கு கிரயக் கூறுகளை அடையாளம் காணுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் வகைப்படுத்தல் தொடர்பான திறன்களை அவர்களிற்கு வழங்குதலும் ஆகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது கிரய கணக்கியல் அறிமுகம், கிரய கணக்கியல் முறைகள், கிரயம் - அளவு - இலாப பகுப்பாய்வு, பொருத்தமான கிரயத்தில் குறுங்கால தீர்மானங்கள், பாதீட்டுக்கான அறிமுகம் மற்றும் நியம கிரயவியல் மற்றும் முரண் பகுப்பாய்வு போன்ற கிரய மற்றும் முகாமைத்துவ கணக்கீட்டின் முக்கிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 1233: சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்**

சந்தைப்படுத்தல் செயற்பாடுகளை முகாமை செய்வதற்கான எண்ணக்கருக்கள், தத்துவங்கள், செயல்முறைகள் மற்றும் நுட்பங்கள் பற்றிய புரிதலை உருவாக்குவதே இந்தப் பாட அலகின் நோக்கமாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது சந்தைப்படுத்தல் மற்றும் அதன் சூழலுக்கான அறிமுகம், இலக்கு சந்தை, பொருட்கள் மற்றும் சேவைகள், விலை, மேம்படுத்தல், விநியோகம், மூலோபாய சந்தைப்படுத்தல் திட்டமிடல், சந்தைப்படுத்தல் தகவல் முறைமை மற்றும் சந்தைப் படுத்தல் ஆராய்ச்சி போன்ற சந்தைப்படுத்தலின் அடிப்படை அம்சங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 1243: வணிகத்திற்கான கணிதமும் புள்ளிவிபரவியலும்**

இந்தப் பாட அலகின் நோக்கமானது வணிகம் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கான கணித மற்றும் புள்ளியியல் அறிவு மற்றும் திறன்களை மாணவர்களுக்கு வழங்குவதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது வணிக கணிதம் மற்றும் புள்ளிவிபர வியலின் முக்கிய அம்சங்களான வகையீடு, உச்சப்படுத்தல் பிரயோகம், தொகையீடும் வணிகத்தில் அவற்றின் பிரயோகமும், புள்ளிவிபர வியலுக்கான அறிமுகம் அதன் வணிக பிரயோகமும், மாதிரி நுட்பங்கள், தரவு காரணிகள் மற்றும் தரவு சேகரித்தல், தரவுகளை முன்னிலைப்ப

டுத்தல், மைய நாட்ட விலகல் அளவைகள் மற்றும் இணைவும் பிற்செலவு ஆய்வும் போன்றன தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 1253: வணிகப் பொருளியல்**

இந்தப் பாட அலகின் நோக்கமானது நிறுவனத்தின் பொருளாதாரம் பற்றிய கண்ணோட்டத்தை வழங்குவதும், வணிகம் தொடர்பான தீர்மானங்கள் எடுப்பதற்கும் உதவுவதன் மூலம் பல்வேறு சூழ்நிலைகளில் தகுந்த தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான திறன்களை வளர்த்துக் கொள்ள மாணவர்களுக்கு உதவுதல்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது பொருளியலின் எண்ணக்கருக்கள், தேவை, வழங்கல் மற்றும் சந்தைச் சமநிலை, நெகிழ்ச்சி மற்றும் பயன்பாடுகள், நுகர்வோர் நடத்தை, உற்பத்திச் செயற்பாடு, செலவுச் செயற்பாடு, சந்தை அமைப்பு, பேரினப் பொருளியல், கெயின்சியன் வருமான நிர்ணய மாதிரிகள் மற்றும் தேசிய வருமானம், முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு போன்ற வணிக பொருளியலின் அடிப்படை அம்சங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 1262: வணிக ஆங்கிலம் II**

இந்தப் பாட அலகின் நோக்கமானது வணிகம் தொடர்பான விடயங்களை வாய்மொழியாகவும் எழுத்துப்பூர்வமாகவும் ஆங்கிலத்தில் திறமையாக தொடர்பாடலை மேற்கொள்ள கூடிய வகையில் மாணவர்களின் திறன்களை அபிவிருத்தி செய்தல் ஆகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 100 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது வணிக ஆங்கிலம் தொடர்பான வாசித்தல், எழுதுதல், இலக்கணம், பேசுதல் மற்றும் கிரகித்தல் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

## இரண்டாம் வருடம் - முதலாம் அரையாண்டு

**BBM 2113: வணிகச் சட்டம்**

இந்தப் பாட அலகின் நோக்கமானது வணிக தொடர்புகள் மற்றும் பரிவர்த்தனைகளில் தாக்கம் செலுத்தும் சட்டத்தின் அடிப்படைக்

கோட்பாடுகள் மற்றும் கருத்துகளை மாணவர்கள் புரிந்துகொள்ள உதவுவதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது சட்டம்: ஓர் அறிமுகம், ஒப்பந்தச் சட்டம், பொருட்களின் விற்பனை, முகவர் சட்டம், கைத்தொழில் சட்டம், பிரச்சினைகளை தீர்ப்பதற்கான மாற்று வழிமுறைகள், வணிக அமைப்புகளின் வகைகள், நிறுவனங்கள் மற்றும் சட்ட ஆளுமை, மூலதனம் மற்றும் நிதி, நிறுவன நிர்வாகம், கம்பனி மற்றும் பங்குடைமை சட்டம், தொழிலாளர் சட்டம், காப்பீட்டு சட்டம், குத்தகை மற்றும் வாடகை மற்றும் வணிக சூழல் தொடர்பான குற்றங்கள் மற்றும் புதிய விதிமுறைகள் போன்ற வணிக சட்டத்தின் முக்கிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 2123: வணிகத்திற்கான கணிய அளவீட்டு முறை**

இந்தப் பாட அலகின் நோக்கமானது வணிகத்தில் உள்ள ஆராய்ச்சி மற்றும் புள்ளியியல் பகுப்பாய்வு கருவிகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதும் அத்தகைய கருவிகளை மாணவர்கள் வணிக தீர்மானங்களை மேற்கொள்ளும் போது பிரயோகிப்பதற்கும் உதவுவதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது கணிய பகுப்பாய்வுக்கான அறிமுகம், இருப்பு மாதிரிகள், கணித ரீதியான நிகழ்ச்சிப்படுத்தல், ஏக பரிமாண நிகழ்ச்சியாக்க தீர்வுகள், வலைப்பின்னல் பகுப்பாய்வு மற்றும் தீர்மானம் எடுக்கும் நுட்பங்கள் போன்ற வணிக கணிய அளவீட்டு முறையின் முக்கிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 2133: மனிதவள முகாமைத்துவம்**

மனித வளங்களை திறம்பட நிர்வகிப்பதற்கான அடிப்படை அறிவை மாணவர்களுக்கு வழங்குதல் மற்றும் மனித வள முகாமைத்துவ துறையில் உள்ள தற்போதைய சிக்கல்கள் மற்றும் வளர்ந்து வரும் போக்குகளை மாணவர்கள் புரிந்துகொள்வதும் இந்தப் பாட அலகின் நோக்கமாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது மனித வள முகாமைத்துவத்துக்கான அறிமுகம், வேலை பகுப்பாய்வு, மனிதவளத் திட்டமிடல், ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வு, பயிற்சி மற்றும் மேம்பாடு, செயற்திறன் மதிப்பிடுதல், இழப்பீட்டு முகாமைத்துவம், ஊழியர் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு, ஊழியர் ஒழுக்கம், மனத்தாங்கல் முகாமைத்துவம் சமகால பிரச்சினைகள் மற்றும் மனித வள முகாமைத்துவத்தில் வளர்ந்து வரும் போக்குகள் போன்ற மனித வள முகாமைத்துவத்தின் அடிப்படை அம்சங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 2143: உயர் முகாமைக் கணக்கீடு**

நிர்வாகக் கணக்கியலின் முக்கிய கருப்பொருள்கள், வணிகங்களின் வரவு செலவுத் திட்டங்களை உருவாக்குவதற்கான வரவு செலவு திட்ட நுட்பங்கள், ஒரு நிறுவனத்தில் பயன்படுத்துவதற்கான மேம்பட்ட செலவு மற்றும் நிர்வாக முடிவெடுத்தலுக்கு பொருத்தமான செலவுகள் மற்றும் மாற்றுதல் செலவுகள் பற்றிய அறிவை மாணவர்கள் பெற்று அவ்வறிவை நிறுவனத்தில் பிரயோகிக்க உதவுவதுமே இந்தப் பாட அலகின் நோக்கமாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது உயர் கணக்கீட்டு முகாமைத்துவத் துக்கான அறிமுகம், உயர் பாதீட்டு நுட்பங்கள், உயர் நியம கிரயவியல் மற்றும் முரண் பகுப்பாய்வு மற்றும் தீர்மானம் எடுப்பதற்கு பொருத்தமான கிரயவியல் போன்ற உயர் முகாமைத்துவ கணக்கீட்டின் முக்கிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 2153: வங்கி முகாமைத்துவம்**

வங்கி முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படும் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் குறிப்பிட்ட வழிமுறைகளை மாணவர்கள் புரிந்து கொள்ள உதவுவதே இந்தப் பாட அலகின் நோக்கமாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது இலங்கையின் நிதியியல் அமைப்பு, வங்கி முறையின் கட்டமைப்பு, இலங்கை மத்திய வங்கி மற்றும் வர்த்தக வங்கிகள், இலங்கையில் வங்கிச் சட்டங்கள், வணிக வங்கிகளின்

ஐந்தொகை, வங்கிகளில் கடன் மற்றும் இடர் முகாமைத்துவம் போன்ற வங்கி முகாமைத்துவத்தின் அடிப்படை விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 2162: வணிக ஆங்கிலம் III**

இந்தப் பாட அலகின் நோக்கமானது மாணவர்களின் வாசிப்பு, எழுதுதல், பேசுதல் மற்றும் கிரகித்தல் போன்ற மொழித் திறன்களை மேம்படுத்துவதற்கும் மற்றும் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பவர்களின் சொற்களஞ்சியத்தை வளப்படுத்துவதற்குமான வாய்ப்புகளை வழங்குவதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 100 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது வணிக ஆங்கிலம் தொடர்பான வாசித்தல், எழுதுதல், இலக்கணம், பேசுதல் மற்றும் கிரகித்தல் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

## இரண்டாம் வருடம் - இரண்டாம் அரையாண்டு

**BBM 2213: சர்வதேச வர்த்தகம்**

இந்தப் பாட அலகின் நோக்கமானது சர்வதேச வர்த்தகத்தில் உள்ள முக்கிய கோட்பாடு சார்ந்த மற்றும் அனுபவபூர்வமான கருத்துக் களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவது மற்றும் வர்த்தகத்தின் ஆதாயங்கள், மாறிவரும் வர்த்தகமுறைகளை பகுப்பாய்வு செய்வதில் கவனம் செலுத்துவதுமாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது உலகளாவிய வணிக போக்குகள், சர்வதேச சந்தைப்படுத்தல் பணியின் நோக்கம், சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகள், பல வகையான வர்த்தக தடைகள், சர்வதேச சந்தைப் படுத்துபவருக்கு கலாசாரத்தின் முக்கியத்துவம், அரசாங்க கொள்கை களின் ஸ்திரத்தன்மை, உலகளாவிய வணிகத்தில் அரசியல் ஆபத்து, சர்வதேச சட்ட சூழல், நுகர்வோர் சேவைகளுக்கான உலகளாவிய சந்தைகள் மற்றும் சர்வதேச சந்தைகளில் பண்டக்குறி போன்ற சர்வதேச வர்த்தகத்தின் முக்கிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 2223: கருத்திட்ட முகாமைத்துவம்**

இந்தப் பாட அலகின் நோக்கமானது வெற்றிகரமான திட்டங்களைத் திட்டமிடுவதற்கும் செயல்படுத்துவதற்குமான திறமைகள் மற்றும் திறன்களை வழங்குவதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது கருத்திட்டம் மற்றும் கருத்திட்ட நிர்வாகத்தின் தன்மை, கருத்திட்டம் மற்றும் வணிக செயற்பாடு, கருத் திட்ட பங்குதாரர்கள், மூலோபாயம் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம், கருத்திட்டத்தின் வாழ்க்கை சுழற்சி, கருத்திட்ட பாதீடு, கருத்திட்டத்தின் சாத்தியப்பாட்டு ஆய்வு, கருத்திட்ட முகாமையாளரின் அடிப்படை பண்புகள் மற்றும் கருத்திட்ட இடர் முகாமைத்துவ செயல்முறை போன்ற கருத்திட்ட முகாமைத்துவத்தின் அடிப்படை விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 2233: சிறு வணிக முகாமைத்துவம்**

நவீன வணிக உலகில் சிறு வணிக முகாமைத்துவம் மற்றும் அதன் பயன்பாடு பற்றிய விழிப்புணர்வை கற்பவர்களுக்கு வழங்குவதே இந்தப் பாட அலகின் நோக்கமாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது சிறு வணிக அறிமுகம், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், சிறு வணிகத்தின் பண்புகள், சிறு வணிகத்தை உருவாக்குதல், சிறு வணிக வடிவங்கள், இலங்கைப் பொருளாதாரத்தில் சிறு வணிகங்களின் முக்கியத்துவம், சிறு வணிக முகாமையாளர்களின் செல்வாக்கு செலுத்தும் காரணிகள், சிறு வணிகத்தின் மாறும் சூழல், குடும்பத்திற்கு சொந்தமான வணிகம், துணிகர தேர்வு செயல்முறை, சாத்தியப்பாட்டு பகுப்பாய்வு, படைப்பாற்றல் மற்றும் பசுமையான தொழில்முனைவு போன்ற சிறு வணிக முகாமைத்துவத்தின் முக்கிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 2243: நிதிக் கணக்கீடு**

இந்தப் பாட அலகின் நோக்கமானது நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும், கணக்கியல் நியமங்களின்படி நிகழ்வுகள் மற்றும் பரிவர்த்தனைகளை பகுப்பாய்வு செய்து விளக்குவதற்கும் மற்றும்

வழங்கப்பட்ட தகவல்களை கொண்டு தீர்மானமெடுப்பதற்கும் மாணவர் களை தயார்படுத்துதலாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள்: 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது நிதி அறிக்கையிடலுக்கான கருத்தியல் கட்டமைப்பு, இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கான தேவை மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்களுக்கான கணக்கீடு போன்ற நிதிக் கணக்கீட்டின் பிரதான விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 2253: வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவம்**

இந்தப் பாட அலகின் நோக்கமானது வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவத்தின் (CRM) முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதும் வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவக் கருவிகளைப் பற்றி அறிந்து கொள்வதும் ஆகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்து வத்துக்கான அறிமுகம், வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவத்தின் வரலாறு மற்றும் வளர்ச்சி, விற்பனை உத்தி மற்றும் வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவம், சேவைத்தரம் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி, வாடிக்கையாளர் வாழ்நாள் மதிப்பு மற்றும் தகவல் தொழில் நுட்பம் செயல்படுத்தப்பட்ட தொடர்பு முகாமைத்துவம் போன்ற வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவத்தின் பிரதான அம்சங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 2262: வணிக ஆங்கிலம் IV**

இந்தப் பாட அலகின் நோக்கமானது வணிகம் தொடர்பான விடயங்களை கற்பவர்களிடையே ஆங்கிலம் மூலமான வாய்மொழி மற்றும் எழுத்துத் தொடர்பாடல் திறன்களை வளர்ப்பதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 100 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது வணிக ஆங்கிலம் தொடர்பான வாசித்தல், எழுதுதல், இலக்கணம், பேசுதல் மற்றும் கிரகித்தல் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

## மூன்றாம் வருடம் - முதலாம் அரையாண்டு

### BBM 3113: நிதி அறிக்கையிடல்

இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் நிதி அறிக்கையின் கட்டமைப்பு, ஒழுங்கு முறை மற்றும் வெளிப்படுத்தல் தேவைகளை பற்றிய அறிவையும் புரிதலையும் வழங்குவதே இந்தப் பாட அலகின் நோக்கமாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது நிதி அறிக்கையிடலுக்கான ஒழுங்குமுறையின் கட்டமைப்பு, கணக்கியல் நியமங்களின் பயன்பாடு, ஒன்றிணைந்த நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் நிதி அறிக்கைகளின் பகுப்பாய்வு மற்றும் விளக்கங்கள் போன்ற நிதி அறிக்கையிடலின் பிரதான விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

### BBM 3123: நிதித் தந்திரோபாயம்

இந்தப் பாட அலகின் நோக்கமானது வணிகத்தில் நிதித் தந்திரோபாயங்களை உருவாக்குவதற்கும் செயல்படுத்துவதற்குமான அறிவு மற்றும் திறன்களை வழங்குவதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது நிதி தந்திரோபாயங்களுக்கான அறிமுகம், ஆபத்து மற்றும் நிச்சயமற்ற நிலையில் மூலதன பாதீடு, மூலதனப் கட்டுப்பாடு, நிதி அந்நியச் செலாவணி, வணிக நிறுவனங்களின் மதிப்பீடு, இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல், செயற்பாட்டு மூலதன முகாமைத்துவம் மற்றும் பங்கு இலாப கொள்கையின் தீர்மானங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் போன்ற நிதி தந்திரோபாயத்தின் அடிப்படை விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

### BBM 3133: நுகர்வோர் நடத்தை

இந்தப் பாட அலகின் நோக்கமானது மாணவர்கள் சிறந்த சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களை உருவாக்குவதற்கு நுகர்வோர் நடத்தை தொடர்பான அறிவை வழங்குவதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது நுகர்வோர் நடத்தைக்கான அறிமுகம், சந்தை ஆராய்ச்சி மற்றும் நுகர்வோர் நடத்தை, சந்தை துண்டாக்கல் மற்றும் நிலைப்படுத்தல், நுகர்வோர் முடிவெடுக்கும் செயல்முறை, நுகர்வோர் முடிவெடுப்பதில் உளவியல் தாக்கங்கள், நுகர்வோர் மனப்பாங்கு, நுகர்வோர் தீர்மானமெடுப்பதில் சமூகவியல் தாக்கங்கள் மற்றும் நுகர்வோர் நடத்தை மாதிரிகள் போன்ற நுகர்வோர் நடத்தையின் அடிப்படை விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 3143: தகவல் முகாமைத்துவம்**

இந்தப் பாட அலகின் நோக்கமானது மாணவர்களை தகவல் முகாமைத்துவம், தகவல் அமைப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் அதன் பயன்பாடு பற்றிய ஒரு எண்ணைக்கருவை புரிந்து கொள்ள வைப்பதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது தரவு மற்றும் தகவலின் வரைவிலக்கணம், தரவுத்தளம் மற்றும் தரவுத்தள முகாமைத்துவ முறைமை, தரவு மாதிரிகள், இயல்பாக்குதல், மென்பொருளியல் தரவுத்தளத்தை உருவாக்குதல் (MS Access/MySQL), தரவுத்தளத்தை வடிவமைப்ப தற்கான கட்டமைக்கப்பட்ட வினவல் மொழி, தகவல் அமைப்புகள் போன்ற தகவல் முகாமைத்துவத்தின் அடிப்படை விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 3153: தொழில் சட்டங்களும் தொழிலாளர் உறவும்**

இந்தப் பாட அலகின் நோக்கமானது இலங்கை தொழிலாளர் சட்டங்கள், சட்ட முறைமை மற்றும் முதலாளி - தொழிலாளர் உறவை நிர்வகித்தல் பற்றிய ஆழமான அறிவை உருவாக்குவதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது இலங்கையின் தொழிற் சட்டங்களுக்கான அறிமுகம், வேலை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், மேலதிக பயன்கள், ஊழியர்களை நிர்வகித்தல், ஊழியர்கள் நகர்வு மற்றும் ஊழியர் உறவுகள் போன்ற தொழிலாளர் சட்டங்கள் மற்றும் தொழிலாளர் உறவு சார்ந்த அடிப்படை விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துகின்றது.

## மூன்றாம் வருடம் - இரண்டாம் அரையாண்டு

**BBM 3213: தந்திரோபாய முகாமைத்துவம்**

இந்தப் பாட அலகின் நோக்கமானது ஒரு நிறுவனம் எதிர் கொள்ளும் தந்திரோபாய சூழ்நிலையை பகுப்பாய்வு செய்வதற்கும், நிறுவனத்திற்கு கிடைக்கக்கூடிய தந்திரோபாய தேர்வுகளை அணுகுவதற்கும், உருவாக்கப்பட்ட தந்திரோபாய தெரிவுகளை செயற்படுத்துவதற்கும் மாணவர்களுக்கு உதவுவதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது தந்திரோபாய முகாமைத்துவத்திற்கான அறிமுகம், தந்திரோபாய முகாமைத்துவ செயல்முறை, தந்திரோபாய திட்டமிடல், அக மற்றும் புற பகுப்பாய்வு, கைத்தொழில் நிறுவனங்கள் பற்றிய ஆய்வு, போட்டி நலன், செயல்முறை மற்றும் கலாசாரம், தந்திரோபாய மட்டங்கள், BCG தாயம், சர்வதேச சூழலில் தந்திரோபாயம், தந்திரோபாயத்தை செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல், கூட்டாண்மை சமூக பொறுப்பு மற்றும் பொது/ இலாப நோக்கற்ற நிறுவனங்களில் தந்திரோபாய முகாமைத்துவம் போன்ற தந்திரோபாய முகாமைத்துவத்தின் அடிப்படை விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 3223: தலைமைத்துவமும் குழு முகாமைத்துவமும்**

இந்தப் பாட அலகின் நோக்கமானது மாணவர்களுக்கு தலைமைத்துவம் மற்றும் குழு முகாமைத்துவம் பற்றிய கோட்பாடு சார்ந்த மற்றும் நடைமுறை அறிவை வழங்குவதுடன் மாணவர்களிடையே தனித்துவமான தலைமைத்துவ திறன்கள் மற்றும் பண்புகளை மேம்படுத்துவதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது தலைமைத்துவம் பற்றிய அறிமுகம், நிறுவனங்களில் தலைமைத்துவத்தின் முக்கியத்துவம், பயனுள்ள தலைமை நடத்தை, தலைமைத்துவ கோட்பாடுகள், தலைமைத்துவ பாணிகள், ஒழுக்க விழுமிய நெறிமுறை தலைமைத்துவம், நிர்வாகிகளின்

தந்திரோபாய தலைமைத்துவம், பல்லின கலாசார சூழலில் தலைமைத் துவம், தலைமைத்துவத்தில் சமகால பிரச்சினைகள் மற்றும் நிறுவனங்களில் அணிகளும் குழுக்களும் போன்ற தலைமைத்துவம் மற்றும் குழு முகாமைத்துவம் சார்ந்த அடிப்படை அம்சங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 3233: செயற்பாட்டு முகாமைத்துவம்**

இந்தப் பாட அலகின் நோக்கமானது உற்பத்தி மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவத்தில் பல்வேறுபட்ட தந்திரோபாயங்களை உருவாக்கு வதற்கு மாணவர்களுக்கு தேவையான அறிவை வழங்குவதாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது உற்பத்தி/ செயற்பாடுகள் பற்றிய ஓர் கண்ணோட்டம், வசதிகள் கிடைக்கத்தக்க இடம், உற்பத்தி வகைகள்/ தளஅமைப்பு, பொருட்கள் சேவை திட்டமிடல், உதிரிபாகங்கள் பராமரிப்பு, வேலை படிப்பு மற்றும் தர முகாமைத்துவம் போன்ற செயற்பாட்டு முகாமைத்துவத்தின் அடிப்படை விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 3243: பொது நிதியியல்**

இலங்கையின் பொது நிதி முகாமைத்துவம் தொடர்பான அறிவு மற்றும் திறன்களை வழங்குவதே இந்தப் பாட அலகின் நோக்கமாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது இலங்கையில் பொது நிதி முகாமைத்துவம் பற்றிய அறிமுகம், நிதி அமைச்சகத்தின் செயல்பாடுகள் மற்றும் பொது நிதியில் திறைசேரியின் பங்கு, இலங்கை அரசாங்கத்தின் நிதி மீதான திறைசேரியின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு, அரசாங்க பாதீட்டு நடைமுறைகள், சிறப்பு நிதியின் முகாமைத்துவம், பொதுச் செலவினங்க ளைக் கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தும் நுட்பங்கள், பொதுச் செலவு முகாமைத்துவம், அரச சொத்து முகாமைத்துவம், இலங்கையில் பொது நிதி தொடர்பான தணிக்கை, இலங்கையில் அரசாங்க நிறுவனங் களின் தணிக்கை மற்றும் கொள்முதல் முகாமைத்துவம் போன்ற பொது நிதியியலின் பிரதான அம்சங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

**BBM 3253: கணக்காய்வும் வரியியலும்**

கணக்காய்வின் அடிப்படைகள், பொருத்தமான கணக்காய்வு நியமங்கள், கணக்காய்வு நியமங்களை பிரயோகிப்பது தொடர்பாகவும், வரியியல் தொடர்பான தத்துவங்கள் மற்றும் நடைமுறைகள் மற்றும் இலங்கையில் வசிக்கும் தனிநபரின் வரிப் பொறுப்பைக் கண்டறிந்து அவற்றைப் பிரயோகிப்பதற்கான ஆற்றலை உருவாக்குவதற்கான அறிவை மாணவர்களுக்கு வழங்குவதே இந்தப் பாட அலகின் நோக்கமாகும்.

அனுமானிக்கப்பட்ட மணித்தியாலங்கள் : 150 மணித்தியாலங்கள்

இந்தப் பாட அலகானது கணக்காய்வு மற்றும் வரியியல் ஆகிய இரண்டு பிரதான பிரிவுகளை கொண்டுள்ளது. கணக்காய்வு பகுதியானது கணக்காய்வுக்கான அறிமுகம், கணக்காய்வுத் திட்டமிடல் மற்றும் ஆவணங்கள், கணக்காய்வுச் சான்றுகள் மற்றும் தணிக்கை நடைமுறைகள், கணக்காய்வு மாதிரி மற்றும் கணக்காய்வு அறிக்கை போன்ற பிரதான அம்சங்கள் தொடர்பாகவும் வரியியல் பகுதியானது இலங்கையின் வரியியல் பற்றிய அறிமுகம், வரிவிதிப்பு, நேரடி மற்றும் மறைமுக வரிகள் மற்றும் தற்போதைய வரி முறையின் செயல்பாடுகள் மற்றும் கொள்கைகள், ஒரு தனிநபரின் மொத்த மதிப்பிடக்கூடிய வருமானம் மற்றும் ஒரு குடியிருப்பாளரின் வருமான வரி பொறுப்பு போன்ற பிரதான அம்சங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்துகின்றது.

## 9. பரீட்சைகள்

### பரீட்சை மொழி

வணிக ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய பாட அலகுகளுக்கான பரீட்சைகள் தமிழ் மொழி மூலம் இடம்பெறும்.

### பரீட்சை அறிவித்தல்

ஒரு கல்வியாண்டில் இரண்டு அரையாண்டு பரீட்சைகள் நடைபெறும். பரீட்சை தொடர்பான அனைத்து அறிவித்தல்களையும் CODL இன் இணையதளத்தில் பார்வையிட முடியும்.

## பரீட்சைக்கு விண்ணப்பித்தல்

பரீட்சைகளுக்கான விண்ணப்பப் படிவங்களை CODL இனால் மாணவர்களுக்கு வழங்கப்படும் தனிப்பட்ட மாணவர் தகவல் முறைமையின் (SIS) ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். மீள்பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பிக்கும் பாடங்களுக்கான பரீட்சைக் கட்டணத்தை வைப்பிலிட்டு வைப்புச்சீட்டின் மென்பிரதியை (Soft copy) SIS ஊடாக சமர்ப்பிக்க வேண்டும். வன் பிரதியை (Hard Copy) CODL இற்கு பதிவுத்தபால் மூலமாகவோ/ நேரடியாகவோ சமர்ப்பிக்க வேண்டும். செலுத்திய பரீட்சைக் கட்டணத்தை திரும்ப பெற்றுக்கொள்ளவோ அல்லது இன்னொரு பாட அலகுக்காக மாற்றம் செய்யவோ முடியாது.

பின்வரும் காரணங்களுக்காக பரீட்சை விண்ணப்பம் நிராகரிக்கப் படலாம்.

* திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் இணையத்தளத்தில் அறிவுறுத்தப்பட்டவாறு பூரணப்படுத்தப்படாத பரீட்சை விண்ணப்பங்கள்.
* பதிவு மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தாது இருத்தல்.
* மாணவர் தொடர்பாக ஏதேனும் முடிவு பெறாத விசாரணைகள் இருத்தல்.
* பரீட்சையில் தோற்றுவதற்கு பொருத்தமான தேவைப்பாடுகளை கொண்டிராமை.

## பரீட்சை அனுமதி அட்டை

பரீட்சைக்கு விண்ணப்பித்ததன் பின்னர், பரீட்சை அனுமதி அட்டையை மாணவர் தகவல் முறைமையினூடாக (SIS) தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். அதன் வன்பிரதியை (Hard copy) பரீட்சை நிலையத்திற்கு மாணவர்கள் கொண்டு வருதல் வேண்டும்.

## பரீட்சை அறிவுறுத்தல்கள்

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பரீட்சை அனுமதி அட்டை மற்றும் மாணவர் பதிவு புத்தகம் என்பவற்றை தன்னகத்தே வைத்திருக்க வேண்டும். பரீட்சையின் போது ஒரு மாணவர் தொடர்பாக ஏதேனும் முறைகேடு நிரூபிக்கப்பட்டால், பின்வரும் தண்டனைகளில் ஏதாவது வழங்கப்படும்.

* பரீட்சை எழுதுவது நிறுத்தப்படும்.
* மாணவர் பதிவு தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக நீக்கம் செய்யப்படும்.
* ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பரீட்சை எழுதுவது தடை செய்யப்படும்.
* யாழ் பல்கலைக்கழகத்தின் மூதவையால் பரிந்துரைக்கப்படும் வேறு ஏதாவது தண்டனை வழங்கப்படும்.

**பரீட்சை மண்டபத்தில் மாணவர்கள் தவிர்க்க வேண்டியவை.**

* தனக்கு அருகில் ஏதாவது உடைமைகள் அல்லது குறிப்புகள் அல்லது வரைபடங்கள் போன்றவற்றை வைத்து இருத்தல்.
* பிரதி செய்தல்.
* ஆள்மாறாட்டம் செய்தல்.
* வேறு ஏதாவது நேர்மையின்மை மற்றும் முறைகேடான நடத்தைகள்.
* தவறான உதவியைப் பெறுதல் அல்லது பெற முயற்சித்தல்.
* மோசடி செய்ய முயற்சித்தல்.
* மேற்குறிப்பிட்ட குற்றங்களில் ஏதேனும் ஒன்றைச் செய்ய உதவி புரிதல்.
* பரீட்சை நடைமுறைகள்/விதிகளை கடைப்பிடிக்காமை.

## பரீட்சை பெறுபேறுகள்

பரீட்சை பெறுபேறுகள் மாணவர் தகவல் முறைமையில் (SIS) வெளியிடப்படும். பொதுவாக அரையாண்டு அடிப்படையில் பரீட்சை நிறைவேறிய இறுதி நாளில் இருந்து 2-3 மாதங்களுக்குள் பரீட்சை முடிவுகளை எதிர்பார்க்க முடியும்.

**மதிப்பீட்டு முறைகள்**

மாணவர்களின் கற்றல் செயற்திறன் தொடர் மதிப்பீடுகள் மற்றும் இறுதி பரீட்சையின் அடிப்படையில் மதிப்பிடப்படும்.

**தொடர் மதிப்பீடுகள்-30%**

ஒவ்வொரு பாட அலகுக்கும் தொடர் மதிப்பீடுகள் உள்ளன. குறைந்தபட்சம் மூன்று மதிப்பீடுகளின் அடிப்படையில் 30 மதிப்பெண்கள் தொடர் மதிப்பீடுகள் மூலம் பெற்றுகொள்ள முடியும். மதிப்பீட்டு பரீட்சைகள் பல்தேர்வு வினாக்கள், கலந்துரையாடல்கள், கட்டுரை வினாக்கள் மற்றும் வேறு ஏதாவது பொருத்தமான முறைகளில் நடைபெறும். அனைத்து தொடர் மதிப்பீடுகளும் இணையவழி மூலமே நடாத்தப்படும். தொடர் மதிப்பீடுகளில் குறைந்தபட்சம் 30 புள்ளிகளுக்கு 10 புள்ளிகளை பெற்றுக்கொண்ட மாணவர் களே இறுதி பரீட்சைக்கு தோற்றமுடியும். தொடர் மதிப்பீடுகளுக்காக மாணவர்கள் பெற்று கொண்ட மொத்த மதிப்பெண்கள் (30%) இறுதி அரையாண்டு பரீட்சைக்கு முன்னர் மாணவர்களுக்கு அறிவிக்கப்படும். தொடர் மதிப்பீட்டுப் பரீட்சைகளில் 10 புள்ளிகளுக்கு குறைவாகப் பெற்று இறுதி அரையாண்டுப் பரீட்சைக்கு தோற்ற தகுதி பெறாத மாணவர்கள் அடுத்துவரும் அணியுடன் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூபா 2000 இனை கட்டண மாகச் செலுத்தி தொடர் மதிப்பீட்டுப் பரீட்சைகளில் பங்குபற்ற முடியும்.

அரையாண்டின் இறுதிப் பரீட்சையில் பங்கு பெறாத மாணவர்களின் தொடர் மதிப்பீடுகளுக்கான மதிப்பெண்கள் அவர்கள் பரீட்சை எடுக்கும் அரையாண்டுக்கு கொண்டு செல்லப்படும்.

**இறுதி எழுத்துப் பரீட்சை - 70%**

இறுதி எழுத்துப் பரீட்சை என்பது அரையாண்டின் இறுதியில் நடைபெறும் எழுத்துப் பரீட்சை ஆகும். இப் பரீட்சையில் மாணவர்கள் 70% மான மதிப்பெண்களை பெற்றுகொள்ள முடியும். பாடப்பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட கிரெடிட் பெறுமானங்களை பொறுத்து இறுதி பரீட்சைக்கான மணித்தியாலங்கள் மாறுபடும். மூன்று கிரெடிட் பாடங்களுக்கு மூன்று மணிநேரமும் இரண்டு கிரெடிட் பாடங்களுக்கு இரண்டு மணிநேரமும் பரீட்சை நடைபெறும்.

**தரப்படுத்தல் முறைமை**

ஒவ்வொரு பாட அலகுக்கும் மாணவர்கள் பெற்றுக்கொண்ட மதிப் பெண்களுக்கு தரம் வழங்கப்படும் முறைமை கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| மதிப்பெண்கள் | தரம் | தரப்புள்ளி |
|---|---|---|
| 80 மற்றும் அதற்கு மேல் | A+ | 4.0 |
| 75- 79 | A | 4.0 |
| 70- 74 | A- | 3.7 |
| 65- 69 | B+ | 3.3 |
| 60- 64 | B | 3.0 |
| 55 - 59 | B- | 2.7 |
| 50- 54 | C+ | 2.3 |
| 45- 49 | C | 2.0 |
| 40- 44 | C - | 1.7 |
| 35- 39 | D+ | 1.3 |
| 30- 34 | D | 1.0 |
| 00- 29 | E | 0.0 |

### கிரெடிட் தேவையை பூர்த்தி செய்தல்

ஒரு மாணவர் குறைந்த பட்ச தொடர் மதிப்பீடுகளுக்கான மதிப்பெண்களைப் பெற்று இறுதி அரையாண்டு பரீட்சையில் தோற்றி இருந்தால் கிரெடிட் தேவை பூர்த்தி செய்யப்பட்டதாக கொள்ளப்படும்.

## GPA ஐ கணிப்பதற்கான வழிகாட்டல்

GPA என்பது ஒரு மாணவரின் ஒட்டுமொத்த கல்விச் செயற்றிறனின் எண்சார்ந்த பிரதிநிதித்துவம் ஆகும். GPA கணிப்பதற்கான சூத்திரம் கீழே தரப்பட்டுள்ளது.

$$\text{GPA} = \frac{\sum_{i=i}^{N} (\text{Credit Hours}) \times (\text{Grade Point per Credit})}{\sum_{i=i}^{N} (\text{Credit Hours})}$$

**GPA கணிப்பீட்டு உதாரணம்**

| Course Code | Grades Earned | Credit | Grade points per credit | Number of Grade point Values Earned=Credits × Grade points per Credit |
|---|---|---|---|---|
| BBM 1113 | A+ | 3 | 4.0 | 12.0 |
| BBM 1123 | A- | 3 | 3.7 | 11.1 |
| BBM 1133 | B+ | 3 | 3.3 | 09.9 |
| BBM 1143 | B | 3 | 3.0 | 09.0 |
| BBM 1153 | C | 3 | 2.0 | 06.0 |
| BBM 1162 | D | 2 | 1.0 | 02.0 |
| **Total** | | **17** | | **50.0** |

$$\text{GPA} = \frac{\text{Total number of Grade Point Values Earned}}{\text{Total number of credits}} = \frac{50.00}{17} = 2.94$$

GPA ஆனது 0-4 வரையான வீச்சு எல்லைக்குள் இருக்கும்

## மீள்பரீட்சைக்கான விதிகள்

ஒரு மாணவர் குறிப்பிட்ட பாட அலகின் தரத்தை உயர்த்துவதற்கு அல்லது அரையாண்டின் இறுதி பரீட்சைக்கு தோற்றவில்லை என்றால் அவர் மீள் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்.

* ஒரு மாணவர் அதிகபட்சமாக மூன்று தடவை (தொடர்ந்து வரும் மூன்று ஆண்டுகளுக்குள்) மாத்திரமே மீள்பரீட்சையில் தோற்றலாம்.
* வகுப்பு "B" க்குக் குறைவான தரத்தை பெற்ற மாணவர் சம்பந்தப்பட்ட அரையாண்டு பரீட்சைக்கு விண்ணப்பித்து குறிப்பிட்ட பாட அலகின் தரத்தை உயர்த்த முடியும்.
* ஒரு மாணவர் மீள்பரீட்சையில் எடுக்கக்கூடிய ஆகக்கூடிய தரம் "B" ஆகும்.
* ஒரு மாணவர் பாடஅலகின் தரத்தை உயர்த்தும் முயற்சியில் முன்பு பெற்ற மதிப்பெண்ணை விட குறைவாக மதிப்பெண்ணை பெற்றிருந்தால் அவற்றில் சிறந்த தரம் கவனத்தில் எடுக்கப்படும்.
* ஒரு மாணவர் ஒரு பாட அலகை அதிகபட்சமாக மூன்று முறை தோற்ற முடியும்.

# 10. பட்டம் வழங்குதல்

## வியாபார முகாமைத்துவமாணி பட்டம்

ஒரு மாணவர் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருந்தால் வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தை பெறுவதற்கான தகுதியை பெறுவார்:

* வணிக ஆங்கிலம் உள்ளடங்கலாக 98 கிரெடிட் பெறுமதியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
* ஆகக்குறைந்தது 2.00 இற்குக் குறையாத OGPA ஐ பெற்றிருத்தல் வேண்டும்.
* எல்லாப் பாடங்களுக்கும் C- அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்புக்களை பெற்றிருத்தல் வேண்டும்.

ஒரு மாணவர் கற்கைநெறியை தொடங்கி ஆறு கல்வி ஆண்டுகளுக்குள் மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாத நிலையில் அவர் வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தை பெற தகுதியற்றவராக கருதப்படுவார்.

## வகுப்புக்களுடனான சித்தி

ஒரு மாணவர் மூன்று கல்வியாண்டுகளுக்குள் வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தை பெறுவதற்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருந்தால் அவர் கீழே உள்ள OGPA அடிப்படையில் வகுப்புக்களுடனான சித்தியை பெற முடியும். மாணவர் ஒருவர் மூன்று வருடங்களிலும் எல்லாப்பாட அலகுகளுக்கும் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் OGPA கணிப்பிடப்படும்.

| வகுப்பு | OGPA |
|---|---|
| முதலாம் வகுப்பு | $\geq 3.70$ |
| இரண்டாம் வகுப்பு (உயர் பிரிவு) | $< 3.70 \geq 3.30$ |
| இரண்டாம் வகுப்பு (கீழ் பிரிவு) | $< 3.30 \geq 3.00$ |

## கற்கை நெறியை முடிவுக்குக் கொண்டுவரும் சந்தர்ப்பங்கள்

BBM பட்டத்தினை பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாத மாணவர்கள் குறித்த சில தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருந்தால் அவர்கள் வியாபார முகாமைத்துவமாணியில் உயர் டிப்ளோமா அல்லது வியாபார முகாமைத்துவமாணியில் டிப்ளோமா சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம்.

## வியாபார முகாமைத்துவமாணியில் உயர் டிப்ளோமா சான்றிதழ்

ஒரு மாணவர் வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தை பெறுவதற்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாதவிடத்து அவர் வியாபார முகாமைத் துவமாணியில் உயர் டிப்ளோமா சான்றிதழை பெறுவதற்கு பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:

* 68 கிரெடிட் பெறுமானங்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
* ஆகக்குறைந்தது 2.00 இற்குக் குறையாத OGPA ஐ பெற்றிருத்தல்.

ஒரு மாணவர் கற்கைநெறியை தொடங்கி ஆறு கல்வி ஆண்டுக்குள் மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே அவர் வியாபார முகாமைத்துவமாணியில் உயர் டிப்ளோமா சான்றிதழை பெற தகுதியுள்ளவராக கருதப்படுவார்.

**வியாபார முகாமைத்துவமாணியில் டிப்ளோமா சான்றிதழ்**

ஒரு மாணவர் வியாபார முகாமைத்துவமாணியில் உயர் டிப்ளோமா சான்றிதழை பெறுவதற்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாதவிடத்து அவர் வியாபார முகாமைத்துவமாணியில் டிப்ளோமா சான்றிதழை பெறுவதற்கு பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:

* 34 கிரெடிட் பெறுமதியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
* ஆகக்குறைந்தது 2.00 இற்குக் குறையாத OGPA ஐ பெற்றிருத்தல்.

ஒரு மாணவர் கற்கைநெறியை தொடங்கி ஆறு கல்வி ஆண்டுக்குள் மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே அவர் வியாபார முகாமைத்துவமாணியில் டிப்ளோமா சான்றிதழை பெற தகுதியுள்ளவராக கருதப்படுவார்.

## விபரமான பெறுபேற்று தாள் (Transcript)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையானது மாணவர்களின் பெறுபேறுகளை அங்கீகரித்த பின்னர் வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தை பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் பெயர் பட்டியல் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால் வெளியிடப்படும். அதன் பிறகு விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிப்பதன் மூலம் மாணவர்கள் தங்களது விபரமான பெறுபேற்று தாளை பெற்றுக்கொள்ளலாம்.

**பட்டச் சான்றிதழ் (Degree Certificate)**

பட்டதாரிகளுக்கான பட்டச் சான்றிதழானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூதவையின் அனுமதியை பெற்ற பின்னர் பட்டமளிப்பு விழா நடைபெற்ற பின்னர் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

# 11. மாணவர் மேன்முறையீடு (STUDENTS' APPEALS)

மாணவர்கள் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் காரணங்களின் நிமிர்த்தம் மேன் முறையீடுகளை (Appeals) மேற்கொள்ள முடியும்.

**1. மருத்துவ காரணத்திற்காக பரீட்சைக்கு சமூகமளிக்காது இருத்தல்**

மாணவர்கள் தங்களது அணியுடன் மருத்துவ காரணத்தினால் உரிய பரீட்சைக்கு சமூகமளிக்காத போது மேன் முறையீட்டுப் படிவம் சமர்ப்பிக்காமல் அடுத்த அணியுடன் மீள் பரீட்சை எழுதும் போது ஆகக் கூடியது "B" பெறுபேறு மட்டுமே பெற முடியும். இதனைத் தவிர்க்கும் பொருட்டு, மருத்துவ காரணத்திற்காக பரீட்சைக்கு சமூகமளிக்காத மாணவர்கள் பரீட்சை முடிவடைந்த 14 நாட்களுக்குள் தங்களுடைய மேன் முறையீட்டுப் படிவங்களை "BBM OFFICE"க்கு சமர்ப்பிக்கும் போது அதனுடன் ரூபா 500 இனை செலுத்தி வைப்புச்சீட்டினை மேன் முறையீட்டுப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். 14 நாட்களுக்கு பின்னர் கிடைக்கப் பெறும் மேன்முறையீட்டுப் படிவங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் உங்களால் அனுப்பப்படும் மருத்துவ சான்றிதழ்கள் பல்கலைக்கழக வைத்திய அதிகாரியால் (University Medical Officer) பரிந்துரைக்கப்படாத பட்சத்திலும் உங்கள் மேன் முறையீடுகள் நிராகரிக்கப்படும்.

**2. ஏற்றுகொள்ளக் கூடிய காரணத்திற்காக பரீட்சைக்கு சமூக மளிக்காது இருத்தல்**

ஏற்றுகொள்ளக் கூடிய காரணத்திற்காக பரீட்சைக்கு சமூகமளிக் காத மாணவர்களும் பரீட்சை முடிவடைந்து 14 நாட்களுக்குள் தங்களுடைய மேன் முறையீட்டுப் படிவங்களை "BBM OFFICE"க்கு சமர்ப்பிக்க முடியும்.

**3. பட்டப்படிப்பை மீண்டும் தொடர்வதற்கான வேண்டுகோள்கள்**

மாணவர்கள் மருத்துவ அல்லது ஏற்றுக்கொள்ள கூடிய காரணத்திற்காக பட்டப்படிப்பை இடைநிறுத்தியிருந்தால் மறுபடியும் பட்டப்படிப்பை தொடர்வதற்கு அனுமதிபெற மேன் முறையீடு செய்யலாம்.

**4. தகுந்த காரணத்துடன் வேறு ஏதாவது வேண்டுகோள்கள்**

மாணவர்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட காரணங்கள் தவிர்ந்த வேறு ஏதாவது வேண்டுகோள்கள் இருந்தாலும் மேன் முறையீட்டுப் படிவம் சமர்ப்பிக்க முடியும்.

மேற்குறிப்பிடப்பட்ட மேன் முறையீடுகள் வியாபார முகாமைத்துவ அலகின் சபை, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட சபை மற்றும் பல்கலைக்கழக மூதவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மட்டுமே பட்டப்படிப்பைத் தொடரவோ அல்லது மீள் பரீட்சையில் தோற்றவோ முடியும்.

**Note 1:** மேன் முறையீட்டுப் படிவங்கள் இல்லாமல் உங்களால் அனுப்பப்படும் கடிதங்கள் (Letters) மேன் முறையீடாக (Appeal) ஏற்று கொள்ளப்படமாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

**Note 2:** மாணவர்கள் 3வது மற்றும் 4வது வகையான மேன் முறையீடுகளை மேற்கொள்ளும் போது அவர்களது முன்னைய பரீட்சை பெறுபேற்று தாள்களை இணைத்தல் வேண்டும்.

**பூரணப்படுத்தப்பட்ட மேன் முறையீட்டுப் படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:**

இணைப்பாளர்
வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறி
முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம்
10ம் ஒழுங்கை,
கலாசாலை வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம், இலங்கை.

## 12. பதிவைப் புதுப்பித்தல் (Renewal)

ஒரு மாணவர் வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறியை பதிவு செய்து மூன்று வருட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்ய தவறின் ரூபா 2000 இனை செலுத்தி தமது பதிவினை ஒவ்வொரு வருடமும் புதுப்பித்துக்கொள்ள வேண்டியது கட்டாயமானதாகும். பதிவைப் புதுப்பித்த மாணவர்கள் மட்டுமே தமது கல்விச் செயற்பாடுகளைத் தொடர அனுமதிக்கப்படுவர்.

## 13. நூலகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகமானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கான கல்வித் தகவல் வள மையத்தின் கருவாகும். பல்கலைக்கழக நூலகமானது மருத்துவ பீடம், பொறியியல் பீடம், வேளாண்மைப் பீடம், தொழில்நுட்ப பீடம், முகாமைத்துவ மற்றும் வணிக பீடம், சித்த மருத்துவப் பிரிவு மற்றும் இராமநாதன் நுண்கலைப் பீடம் ஆகிய 7 கிளைகளை கொண்டது. BBM மாணவர்கள் தங்கள் அறிவை மேம்படுத்த நூலகத்தை அணுகலாம். மேலதிக தகவல்களுக்கு http://www.lib.jfn.ac.lk/ ஐப் பார்வையிடவும்.

**தொடர்புகளுக்கு :**

**பிரதான நூலகம்**
தபால்பெட்டி இல:57, நூலகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**பீடக்கிளை**
முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# தொடர்பு விபரங்கள்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உப வேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
தபால் பெட்டி இல:57,
இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம், இலங்கை.

தொலைபேசி இலக்கம் :0212218100
மின்னஞ்சல்:info@univ.jfn.ac.lk

## முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம்

பீடாதிபதி,
முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம்,
10ம் ஒழுங்கை
கலாசாலை வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம், இலங்கை.

தொலைபேசி இலக்கம் : 0212223610 மற்றும் 0212212216
மின்னஞ்சல்: info@maco.jfn.ac.lk

## வியாபார முகாமைத்துவமாணி அலுவலகம்

இணைப்பாளர்,
வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறி,
முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம்,
10ம் ஒழுங்கை
கலாசாலை வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம், இலங்கை.

தொலைபேசி இலக்கம்: 0212221106
மின்னஞ்சல்: bbm@maco.jfn.ac.lk

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

பணிப்பாளர்,
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம், இலங்கை.

தொலைபேசி இலக்கம் : 0212223612
மின்னஞ்சல்: mdlcrd@univ.jfn.ac.lk